## 22. ஒப்புரவறிதல்

211. *கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்*
*டென்னாற்றுங் கொல்லோ உலகு*

**கார்முகில் கைம்மாறு எதிர்பார்த்து**
**காலம் முழுவதும் மழை பெய்வதில்லை !**
**காக்கும் மழை போலானவர்கள் கைம்மாறாக**
**காலத்திற்கும் பதிலுதவி கேட்பதில்லை !**

212. *தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

**பாடுபட்டு பாடுபட்டுக் காலம் முழுவதும்**
**பார்த்துச் சேர்த்த பொருளெல்லாம்**
**பார்த்துப் பார்த்து பரிதவிப்போர்க்கு உதவிடவே**
**பாய வேண்டும் !**

213. *புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற*

**தேவருலகத்திலும் பூவுலகத்திலும்**
**தேடினாலும் கிடைக்காது "ஒப்புரவு" எனும்**
**தேர்ந்த பொது நலப்பண்பு !**

214. *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்*

**உலக நடப்பை ஒத்து ஒப்புரவை அறிந்து**
**உதவி தேவைப்படுபவர்களுக்குத் தன் வாழ்வை**
**உதவிடும் வகையில் அமைத்துக் கொள்பவனே**
**உயிர் வாழ்பவன் ! மாறானவன் மறைந்தவனே !**

215. *ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு*

**பொது நல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின்**
**பொருட் செல்வமானது ஊரிலுள்ள**
**பொது மக்கள் அனைவருக்கும்**
**பொழுதும் பயன்தரும் ஊருணி நீராகும் !**

216. *பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்*

**மற்றவர்களுக்கு உதவும் குணத்தை உடைய**
**மனிதனிடம் சேரும் செல்வம்**
**மரம் பழுத்து ஊரின் நடுவே வீற்று**
**மற்றனைவருக்கும் பயன் தருவதைப் போன்று !**

217. *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்*

**மரத்தின் எல்லா உறுப்புகளும்**
**மருந்தாகப் பயன்படுத்துவதைப் போல்**
**மற்றவர்களுக்கு உதவிடும் ஒப்புரவு எனும்**
**மகத்தானப் பண்புள்ளவனிடம் சேரும் செல்வம் !**

218. *இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்*
*கடனறி காட்சி யவர்*

**வாழும் வரை பிறருக்கு உதவுவதையே**
**வாழ்நாள் கடமையாக கொண்டவர்கள்**
**வாழ்க்கையில் வறுமை வந்தாலும்**
**வாழ்வில் கொண்ட கடமையை, விட மாட்டார்கள் !**

219. *நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர*
*செய்யா தமைகலா வாறு*

**வறியவர்களுக்கு உதவிடும் பண்புள்ளவனுக்கு**
**வறுமை எது வெனில் தாம் உதவிடும்**
**வன்மையிலிருந்து விலகி உதவிட முடியாமல்**
**வருந்துவதே ஆகும் !**

220. *ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்*
*விற்றுக்கோள் தக்க துடைத்து*

**உதவிகளைப் பிறருக்குச் செய்வதால்**
**உதவிடுபவனுக்குக் கேடு**
**உடன் வருமென்றால் அக்கேட்டை அவன்**
**உயிரே விலையாயினும் கொடுத்து வாங்கினாலும் நன்மையே !**